விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 321 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 19 சனிக்கிழமை (05.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P. 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## இலங்கையில் முதலாவது
# குரங்கு அம்மை நோயாளி அடையாளம்!

(கொழும்பு)

**இலங்கையில் குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.**

இவர் கடந்த முதலாம் திகதி டுபாயில் இருந்து நாடு திரும்பிய 20 வயதுடைய இலங்கையர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விரிவாக்கப்பட்ட நிணநீர் கணுக்கள் மற்றும் சோர்வு உள்ளிட்ட பிற

11

# யாழ். மாவட்டத்தில் டெங்கு தீவிரம் மக்கள் அவதானத்துடன் இருக்கவும்
## மாவட்ட சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயால், இன்றுவரையான காலப்பகுதியில் இரண்டாயிரத்து 774பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று டெங்கு நோய் பரவல் தொடர்பாக தனது அலுவலகத்தில் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இந்த வருடத்தில் 8 டெங்கு நோய் இறப்புக்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த 2020ஆம் ஆண்டு

11

# தமிழர்களுக்கான தீர்வு ஏமாற்று நாடகமே
## சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு



*(யாழ்ப்பாணம்)*

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வு வழங்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமையானது ஏமாற்றும் செயலாகும் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

*(11 ஆம் பக்கம் பார்க்க)*

# ஓய்வுக்கு முன்னர் பிரதமராக மகிந்த
## மொட்டுக்கட்சி விருப்பம்



(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவியில் நியமிப்பது சம்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அண்மையில் விசேட பேச்சுவார்த்தை

11

# ஆசிரியர்கள், மாணவர்களின்
## உடைகளில் மாற்றமில்லை கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு காரணத்துக்காகவும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் உடைகளில் மாற்றம் செய்யப்படமாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்

11

# நீரிழிவு நோயாளர்கள் யாழில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது இந்த வருடம் சுமார் 3000இற்கும் மேற்பட்ட நீரிழிவு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி விசேட வைத்திய நிபுணர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நீரிழிவு நோயின் தாக்கம்

11

## வனவள திணைக்களத்தின் காணியில்
# வயிற்றுப்பசிக்காக விவசாயம் மேற்கொண்ட இருவர் கைது
## வவுனியாவில் இந்த நிலை

(குருமன்காடு)

வவுனியா வடக்கு, காஞ்சிரமோட்டைப் பகுதியில் குடும்ப வாழ்வாதாரத்திற்காக விவசாயம் செய்த குடும்பஸ்தர்களுக்கு எதிராக வனவளத் திணைக்களத்தால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இருவர் நெடுங்கேணி

11

# ரயில் மோதியதில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - புங்கங்குளம் புகையிரதக் கடவையில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த குளிரூட்டப்பட்ட புகையிரதம் மோதியதில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

11

# மின்வெட்டு நேரம் குறைப்பு

(கொழும்பு)

இன்று சனிக்கிழமைக்கான மின்வெட்டு நேர அட்டவணையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

11

## விவசாயிகளுக்கு
# உரம், எரிபொருள் இலவசம்
## அரசு அதிரடி அறிவிப்பு



05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலக உபயோகத்திற்கு பொருத்தமான இடம்

## வாடகைக்கு தேவை

யாழ்.நகர மத்தியில் அல்லது யாழ்.நகரை அண்டிய பகுதியில் 3500 - 4000 சதுர அடி விஸ்தீரணம் உள்ள அலுவலக உபயோகத்திற்கு ஏற்றதும் தரிப்பிட வசதிகளுடன் கூடியதுமான கட்டடம் வாடகைக்குத் தேவை. (C-5213)

தொடர்புகளுக்கு:- 070 366 3603


## நெடுங்கேணிப் பகுதியில் கைக்குண்டு மீட்பு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள் ளது.

வவுனியா வடக்கு, நெடுங் கேணி, ஒலுமடுப் பகுதியில் நேற்று வீதியோர மாக உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற நபர் ஒருவர் குறித்த வீதியோரத்தில் கைக் குண் டு ஒன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற நெடுங் கேணி பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் துணையுடன் குறித்த கைக்குண்டை மீட்டெடுத்ததுடன், அதனை செயலிழக்கச் செய்துள்ளனர். (நி-6-250)


## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றுக்கு தகைமை அல்லது விருப்பமுடையவர்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- வரவேற்பாளர்
- துப்புரவு பணியாளர்

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள் (C-5218)

தொடர்பு:- 070 223 3344



## பகுதிநேர வேலைவாய்ப்புகள்

உங்கள் வருமானத்தினை அதிகரிக்க இன்றே பகுதி நேர வேலைவாய்ப்பில் இணைந்து கொள்ளுங்கள்

- Typing
- Photo Designing
- Video Editing
- Social Media Managers

வயதெல்லை 18 – 30

பதிவுக்கட்டணம் 5100/- (நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு மட்டும். (13349)

தினமும் 500/= - 1000/= வரையான வேதனம். ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிரக்கோவையினை Part time Job எனக் குறிப்பிட்டு Whatsapp / Emailஇல் அனுப்புங்கள்.

071 071 6979 winstarvc@gmail.com


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ரூபானந்தன்

(உரிமையாளர் ரூபீனாஸ் புடைவையகம், நெல்லியடி)



வதிரி, திருவெண்பாதியைப் பிறப்பிடமாகவும் மன்னாதோட்டம் ரூபீனா இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ரூபானந்தன் அவர்கள் நேற்று (04.11.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அம்மாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி ராகினியின் (லலிதா) அன்புக் கணவரும் ஜீவானந்தன் (லண்டன்), ஜீவிதன், சுஜீவன், ரஜீவன் (சுவிஸ்), ரூபீனா (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணானந்தன், சதானந்தன் மற்றும் இந்திராணி, விவேகானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற விஜயரத்தினம், காலஞ்சென்ற சி.க.இராசேந்திரன், வி.புஸ்பராணி, கி.புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஜீவானந்தன் மோகனப்பிரியா, ஜீவிதன் கௌதமி, சுஜீவன் இந்துஷியா, ரஜீவன் தாட்சாயினி ஆகியோரின் மாமனாரும் ஹரிஸ், அஹானா, டனுஷ், சஷானா, சக்ஷவின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2022) சனிக்கிழமை காலை 10.30 மணியிவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
076 233 6468

(C-5214)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13353)

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 814 7389, 077 986 5457


## மரண அறிவித்தல்



மலர்வு 1959 . 03 . 28

உதிர்வு 2022 . 11 . 03

திருமதி

### அன்னலிங்கம் அருந்தவச்செல்வி

குமுதெனி அல்வாய் வடமத்தி, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலிங்கம் அருந்தவச்செல்வி (சிவா) அவர்கள் 2022.11.03 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு
077 743 0132

(13348)

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் அழகராஜா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை (Toronto) வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அழகராஜா ரொரண்டோவில் 02.11.2022 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - சவுந்தரம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நளினியின் பாசமிகு கணவரும் துரைராஜா (கனடா), காலஞ்சென்ற கனகாம்பாள் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருண் (கனடா), கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயலக்சுமி (யாழ்ப்பாணம்), ராஜசேகரன் (கண்ணன் S.PN கொம்பனி), கமல்தாசன் (ஸ்ரான்லி கல்லூரி), மனோகரன் (யாழ்.பிரதம தபாலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துஷ்யந்தன் (கனடா), சத்தியேந்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் கமலாம்பிகை மற்றும் காலஞ்சென்ற பரமநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு Bromton Crematorium & Visiting Center, 30 Bromvin ct.Brompton ON LbT SG2 Canadaவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிறு 5 மணியளவில் தகனக்கிரியை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தகவல்: மருமகன் ரா.கமல்தாசன் 077 526 5344 | த.துஸ்யந்தன் (கனடா) 0014167355292 | சா.தனுசன் (கனடா) 00116479966491 |

(13354)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் இரத்த வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

குறிப்பாக B+ மற்றும் O+ ஆகிய இரத்தங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தனர். இரத்த தானம் செய்ய விரும்பும் குருதி கொடையாளர்கள் யாழ்.போதனா மருத்துவமனையின் பின்புறமாக அமைந்துள்ள 12 ஆம் இலக்க நுழைவாயில் ஊடாக இரத்த வங்கிக்கு தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் நேரில் சமுகம் அளித்து குருதிக் கொடை வழங்கலாம்.

அதேவேளை மேலதிக விபரங்கள் தேவைப்படினும் இரத்ததான முகாம்களை ஒழுங்கமைப்பு செய்ய விரும்புவோரும் 077 210 5375 மற்றும் 021 222 3063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளனர். (நி-6-33)

# வெளிவந்துவிட்டது 'கலைமுகம்'



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் காலாண்டு சஞ்சிகையான "கலைமுகம்" இதழ் 74 வெளிவந்து விட்டது.

இவ் இதழில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்பு நேர்காணல் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

புக்கர் பரிசை வென்ற இலங்கை எழுத்தாளர் பற்றிய விடயங்கள்,ஒரு சிற்பியின் உடைந்துபோன சிற்பம் எனும் தலைப்பிலான சிறுகதைகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ராஜா பிளாசா மாதிரிக் கிராமம் 100 வீட்டுத்திட்ட காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணியவில் கோண்டாவில் பலாலி வீதி, இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக ஓய்வுநிலை மாவட்ட செயலர் நா. வேதநாயகன், கோண்டாவில் ராஜா பிளாசா உரிமையாளர், திருமதி.இ. கு. ரஞ்சினிதேவி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உதவிஅரசாங்க அதிபர் (காணி) சு.முரளீதரன், உடுவில் பிரதேச செயலர் த. முகுந்தன், கோப்பாய் பிரதேச செயலர் திருமதி.சுபாசினி மதியழகன், கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டப உரிமையாளர் செ. திருமாறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# மணியம் தோட்டப் பகுதியில் ஹெரோயினுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்றை முன்தினம் வியாழக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸ் குழுவினர் இருவரை கைது செய்துள்ளதுடன் அவர்களிடம் இருந்து 40 மற்றும் 42 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் மீட்டுள்ளனர். (நி-6-33)

# 'உயிராயுதம்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் மு. சிங்கராயர் எழுதிய 'உயிராயுதம்' நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது. (6)



சிவலிங்கம் பரமேஸ்வரி என்பவரின் 75 ஆவது பிறந்ததின நினைவாக அவரின் பிள்ளைகளால் கம்பர் மலையில் உள்ள 300 குடும்பங்களுக்கு தலா ரூ.2500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் நேற்று கலாவாணி முன்பள்ளியில் வழங்கப்பட்டன. (படம்- மகாலிங்கம்)

# தொடர் மழை காரணமாக பயணிக்க முடியாத நிலையில் வீதி

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பகுதியில் உள்ள வீதி ஒன்று மழை வெள்ளம் காரணமாக பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீதியை புனரமைக்க அருகில் உள்ள காணி உரிமையாளர்கள் தடையாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் கடந்த சில தினங்களாக பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை மற்றும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் வீதியை பயன்படுத்தி வருவதன் காரணமாக சொல்லொனாத் துயரை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமின்றி இப்பகுதியில் பல விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்காக சென்று வருவதாகவும் இதற்கான உள்ளீடுகளான நெல்,உர வகைகளை கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் பலர் இப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதை கைவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் வீதியைப் புனரமைப்பதற்கு இடையூறாக உள்ள சில காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி எமக்கு ஒரு தற்காலிக வீதியையாவது பெற்றுத் தருமாறும் அப்பகுதிமக்கள்மேலும் தெரிவித்தனர். (4-316)

# குவித்து வைக்கப்பட்ட பனையோலைகளுக்கு தீ வைப்பு



(கரணவாய்)

வல்வெட்டித்துறையில் பனங்காணியில் குவிக்கப்பட்ட பனை ஓலைகள் விஷமிகளால் தீவைத்து எரிக்கப்பட்டன.

வல் வெட் டித் துறை தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்திற்கு அரு கில் உள்ள பனங்காணியில் குவித்து வைக்கப்பட்ட காய்ந்த பனை ஓலைகளுக்கு விஷமிகளால் நேற்று அதிகாலை தீ வைக்கப்பட்டதில் இருநூறுக்கும் மேற்பட்ட ஓலைகள் முற்றாக எரிந்து சாம்பலாகின.

அங்கு காணப்பட்ட இருப்பிடத்தின் மீதும் கழிவொயில் ஊற்றிய விஷமிகள் அயலவர்கள் வந்தபோது கழிவொயில் கொண்டு வந்த ரின்னையும் விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. (6-60)

# 'பக்திப் பாசுரங்கள்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் எழுதிய பக்திப் பாசுரங்கள் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு, வாலையம்மன் வீதி, வாலையம்மன் சனசமூக நிலையத்தில் மாகாண கல்வித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.கிரிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி.விக்னேஸ்வரி பவநேசன் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# சேந்தாங்குள கடற்பரப்பில் 60 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சேந்தாங்குளம் கடற்கரையை அண்டிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 60 கிலோ கிராம் கேரளக் கஞ்சா பொதிகள் நேற்று வெள்ளிக்கிழமை இராணுவத்தினரால் மீட்கப்படடுள்ளன.

குறித்த பகுதியில் ஒரு தொகை கஞ்சாப்பொதிகள் காணப்படுவதாக இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்தில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இளவாலை பொலிஸாரிடம் இராணுவத்தினர் பாரப்படுத்தியுள்ளனர். (நி-6-33-104)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு. சுப்ரமணியம் கனகராஜேஸ்வரன்

**(Rtd estate apothecary cum pharmacist - Mcleod hospital inuvil)**



தோற்றம் 10.05.1939 மறைவு 04.11.2022

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் கனகராஜேஸ்வரன் அவர்கள் நேற்று (04.11.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - கண்மலர் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பராசக்தி (இளைப்பாறிய ஆசிரியை - யாழ். யூனியன் கல்லூரி, வீமன்காமம் மகா வித்தியாலயம், சிரேஷ்ட விரிவுரையாளர் தொலைக்கல்வி) அவர்களின் ஆருயிர்க் கணவரும் மிதிலா அவர்களின் அன்புத் தந்தையும் யோகேந்திரன் அவர்களின் அருமை மாமனாரும் நிலாகினி, ஹிருஷிகேஷ் அவர்களின் அருமை அம்மப்பாவும் நடராஜா - இரத்தினமணி அவர்களின் அருமை சம்பந்தியும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் (சட்டத்தரணி) தர்மராஜேஸ்வரன் (மக்கள் வங்கி முகாமையாளர்), ஜெகதீஸ்வரி(ஆசிரியை) ஜதிந்திரேஸ்வரன் மற்றும், விமலேஸ்வரி, மகேஸ்வரன், குலராஜராஜேஸ்வரி தயாளந்தேஸ்வரன் ஜெயமங்களேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் திலகவதி (இளைப்பாறிய ஆசிரியை) நாகராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவலோகநாதன் (விரிவுரையாளர் தொழில்நுட்பக் கல்லூரி), இராஜராஜேஸ்வரன் (இளைப்பாறிய விரிவுரையாளர் - மருத்துவபீடம்), மணிமேகலை, விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் பகீரதன், தார்மீகன் ஆகியோரின் சித்தப்பாவும் வசீகரன், மயூரன், திருமால்மருகன், திருமுருகன், திருசெந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானசக்தி காலஞ்சென்ற துரையப்பா (கூட்டுறவுப் பரிசோதகர்) மற்றும் நாகரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை), தவராஜா(இளைப்பாறிய பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் சரஸ்வதி, சிவஞானராசா(இளைப்பாறிய இ.போ.ச உத்தியோகத்தர்), இரஞ்சினி (சட்டத்தரணி) ஆகியோரின் சகலனும் கோபிராஜ், புவிராஜ், சிவரதன், சிவரதனி ஆகியோரின் பெரிய தந்தையும் தரணிதரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 06.11.2022 அன்று காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சன் காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி பராசக்தி கனகராஜேஸ்வரன் +94776255326
மிதிலா +94755906858

தகவல்: குடும்பத்தினர்

(C-5215)

### பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்

# டொமிபோல்-ஸ்டெபீனோஸ் காலிறுதிக்கு முன்னேற்றம்



ஆண்களுக்கான பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுப் போட்டிகளில் அமெரிக்காவின் டொமிபோல் மற்றும் கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் டொமி போல், ஸ்பெயினின் பாப்லோ கரேனோ புஸ்டாவை எதிர்கொண்டார்.

இப்போட்டியில் அமெரிக்காவின் டொமி போல், 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோல, இன்னொரு போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ், பிரான்ஸின் கோரெண்டின் மௌடெட்டுடன் மோதினார்.

இப்போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ், 6-3, 7-6 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (6)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
Passport அவசியமில்லை
55'000 விசாக்கள்
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இன்னும் இரண்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்
எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-5189)
V2 Travels 0768226240 0768226244

வேலையாள் தேவை
ஈர அரிசி அரைத்து மா வறுக்க வேலையாள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். (வேலை பழகி வேலை செய்யலாம்) சம்பளம் 1500/= இற்கு மேல்
(C-5219)
077 936 1356 நெல்லியடி

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2724

கணேஷன்

புருசன் பொண்டாட்டிய அடிச்சா நியூஸ் பேப்பர்ல வருது



பொண்டாட்டி புருசன அடிச்சா ஜோக்ல மட்டும் தான் வருது நல்லா இருக்கய்யா உங்க டீலிங்

காயத்ரி

கடவுள் படைச்சதுலே எனக்கு பிடிச்ச 2 விசயம் வாயும் வயிறும்



மனுசன் படைச்சதுல எனக்குப் பிடிச்ச இரண்டு விசயம் சோறும் குழம்பும்

ரூபன்

உள்ள இருந்தாலும் சாப்பிடுறானுங்க வெளியே வந்தாலும் சாப்பிடுறானுங்க




சங்கர்

மரியாதை வயதைப் பார்த்து வருவதில்லை. அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகின்றன.



கம்சா



வரலாற்றில் இடம்பிடித்தவர்கள் ஏதோ ஒரு காரணத்துக்காக வாழ்க்கையில் உறவுகளால் உணர்வுகளால் தனிமைப்படுத்தப்பட்டவர்களே

அனுஜா

வாழ்க்கையில் ஜெயிக்கனும் என்றால் அடுத்து என்ன பண்ணலாம்னு பாருங்க அடுத்தவன் என்ன பண்ணுறான்னு பார்க்காதீங்க.




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு உரம், எரிபொருள் இலவசம்

## அரசாங்கம் அதிரடி அறிவிப்பு

**(கொழும்பு)**

**எதிர்வரும் பருவ காலத்தில் உரம் இலவசமாக வழங்கப் படும் என விவசாய அமைச்சர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

பருவகால ஆரம்பத்தில் விவசாயிகளுக்கு உரம் இலவசமாக வழங்கப்படும். இயற்கை உரங்களை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஹெக்டேருக்கு 20,000 ரூபாய் மானியமும் வழங்கப்படும்.

அத்துடன் சீனாவிலிருந்து 10.6 மில்லியன் லீற்றர் எரிபொருளை நன்கொடையாகப் பெறவுள்ளோம். அந்த எரிபொருள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

குறிப்பாக அவை அறுவடை காலத்தில் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

அனைத்து விவசாயிகளுக்கும் இயற்கை உரங்களை வாங்குவதற்கு ஹெக்டேருக்கு 20,000 ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் விரும்பி வாங்கினால்,அந்த நிறுவனத்திற்கு பணம் வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (நி)

# குரங்குக் காய்ச்சல் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

குரங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க விமான நிலையங்கள் மற்றும் ஏனைய இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒருவரின் காயங்களில் இருந்து வெளியேறும் சுரப்புகளை நேரடியாக தொடுவதன் மூலம் மற்றுமொருவருக்கு தொற்று ஏற்படலாம் என அச்சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் நாட்டில் இனங்காணப்பட்டமை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த நோயின் சிறப்பு என்னவென்றால், 80 வீதத்துக்கும் அதிகமான நோயாளிகள் தாங்களாகவே குணமடைகிறார்கள்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த நாடு என்ன நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை தொழில்நுட்பக் குழு அறிவிக்கும் வரை மக்கள் இந்த விடயத்தில் தேவையற்ற பீதியின்றி இருக்கவும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வட-கிழக்கில் இருந்தும் தமிழர்களை விரட்ட முனைப்புடன் செயற்படும் பெரும்பான்மையினர்

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

சமஷ்டி முறையில் நாட்டின் அரசியல் யாப்பை தயாரித்து தமிழர்களை தமிழர்களே ஆள இடமளிக்க வேண்டும். இதுவே எமக்கான தீர்வு என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாதாந்த கேள்வி பதிலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்களே இந்நாட்டின் ஆதிக்குடிகள். சிங்கள மொழி 1400 வருடங்களுக்கு முன்னர் தான் பிறந்தது. அதற்கு முன்னர் இந் நாட்டில் சிங்களவர் என்று ஓர் இனம் இருக்கவில்லை.

வடகிழக்கில் தமிழ்தான் பெரும்பான்மை மொழி அங்கு ஏன் சிங்களத்தைத் திணிக்க வேண்டும் என்று சிங்களவர்கள் சிந்திப்பதில்லை.

இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதுமல்லாமல் நாட்டில் பரவலாக வாழ்ந்த தமிழ் மக்கள் கலகங்கள், காணி அபகரிப்பு, அரசாங்க தனிமொழிச்சட்டம் போன்றவற்றின் காரணமாக சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் இருந்து படிப்படியாக விரட்டி அடிக்கப்பட்டு தற்போது வடகிழக்கில் மட்டும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பௌத்தர்கள் வாழாத இடங்களில் புத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. தமிழர்களின் மக்கள் தொகையைக் குறைக்கும் வண்ணம் நில ஆக்கிரமிப்புக்களும் சிங்களக் குடியேற்றமும் நடைபெறுகின்றன.

எமது மீனவர்களை தமது பாரம்பரிய மீன்பிடி இடங்களில் மீன்பிடிக்க விடாமல் தடுத்து தெற்கிலிருந்து வரும் மீனவர்களுக்கு மீன்பிடிக்க விட்டிருக்கின்றனர் படையினர். பல இடங்களில் அவர்கள் சட்டத்திற்கு மாறான முறையில் மீன்பிடித்து தெற்கிற்கு அனுப்புகின்றனர்.

வருமானத்தை தாம் எடுக்கின்றனர். எமது மீனவர்கள் பல விதத்திலும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளனர்.

கடற்கரையோரக் காணிகள் தமக்கு வேண்டும் என்று கூறி சிங்கள மாகாணங்களிலிருந்து தமிழ் மாகாணங்களுக்குள் ஊடுருவி வடகிழக்கு தமிழர்களின் தாயகத்தைப் பிரித்து எமது தொடர் இருப்பை இல்லாதாக்குவதற்கு அரசாங்கங்கள், புத்த பிக்குகள், படையினரின் உதவியுடன் பாடுபட்டு வருகின்றனர்.

மாகாண சபைகளை இயங்க விடாது எம்மை மத்திய சிங்கள அரசாங்கமே ஆண்டு கொண்டிருக்கின்றது. முதலில் கொழும்பில் இருந்தும் மற்றைய மாகாணங்களில் இருந்தும் தமிழர்கள் விரட்டப்பட்டார்கள். இன்று வடகிழக்கில் இருந்தும் அவர்களை விரட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே படிப் படியாகத் தமிழர்களை இந்த நாட்டை விட்டு விரட்டவும் அவர்களை அடிமைகளாக்கவுமே நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல பிரச்சினைகளை எமது மக்கள் எதிர்நோக்கும் போது வடகிழக்குத் தமிழர்களுக்கு என்ன பிரச்சினைகள் என்று கேட்பது வியப்பை அளிக்கின்றது.

தமிழர்களுக்கிருக்கும் முக்கிய பிரச்சினை அவர்களைச் சிங்களவர்கள் ஆளுகின்றார்கள் என்பதே. இதற்கு ஒரேயொரு தீர்வு கூட்டு சமஷ்டி முறையில் நாட்டின் அரசியல் யாப்பைத் தயாரித்து நம்மை நாமே ஆள இடமளிப்பதாகும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# இராசிபலன்

05.11.2022
ஐப்பசி 19, சனிக்கிழமை
சுவாதசி முன்னிரவு 6.21 மணிவரை

உத்தரட்டாதி பின்னிரவு 1.29 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை

சனிப்பிரதோஷ விரதம்
சந்திராஷ்டமம்
பூரம்

வளவன்




வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசங்கள் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




கோரிக்கைகள் நிறைவேறும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.




பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும். போசன சுகமுண்டு.




பாசமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குள் வாழும் பலவீனங்கள் படமெடுக்கும் பாம்புகள் போன்றவை.

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 20





"வந்தியத்தேவா! ஒரு பிராயத்தைத் தாண்டியவர்களுக்கு இந்த மாதிரி ஸ்திரீ சபலம் ஏற்பட்டால் எல்லோருக்கும் சிறிது இளக்காரமாகத்தானே இருக்கும்?"

"காரணம் அது ஒன்றுமில்லை உண்மைக் காரணத்தை நான் சொல்லட்டுமா, கந்தமாறா? பெண்கள் எப்போதும் சற்று பொறாமை பிடித்தவர்கள். உன் வீட்டுப் பெண்களைப் பற்றிக் குறைவாகச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே! பெண் உலகமே இப்படித்தான்!

உன் குடும்பத்துப் பெண்கள் கருநிறத்து அழகிகள். பழுவேட்டரையரின் ஆசை நாயகியோ செக்கச் செவேலென்று பொன்னிறமாயிருக்கிறாள். ஆகையால் அவளை இவர்களுக்குப் பிடிக்கவில்லை! அது காரணமாக வேறு ஏதேதோ கதை கட்டிச் சொல்கிறார்கள்!..."

"அடே! இது என்ன விந்தை! உனக்கு எப்படி அவளுடைய நிறத்தைப் பற்றித் தெரியும்? அவளை நீ பார்த்திருக்கிறாயா, என்ன? எங்கே, எப்படிப் பார்த்தாய்? பழுவேட்டரையருக்கு மட்டும் இது தெரிந்தால் உன் உயிர் உன்னுடையது அல்ல!..."

"கந்தமாறா! இதற்கெல்லாம் நான் பயந்தவன் அல்ல அது உனக்குத் தெரியும். மேலும் நான் அனுசிதமான காரியம் எதுவும் செய்யவும் இல்லை. வீரநாராயணபுரத்தில் பழுவேட்டரையரின் பரிவாரங்கள் சாலையோடு சென்றபோது கூட்டத்தோடு கூட்டமாய் நானும் சாலை ஓரமாக ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் எல்லாம் நீங்கள் அனுப்பி வைத்த மரியாதைகளாமே? அது உண்மையா?"

"ஆம், நாங்கள் தான் அனுப்பிவைத்தோம் அதனால் என்ன?..."

"அதனால் என்ன? ஒன்றுமில்லை பழுவேட்டரையருக்கு நீங்கள் அளித்த வரவேற்பு மரியாதைகளையும் எனக்கு அளித்த வரவேற்பையும் ஒப்பிட்டுப் பார்த்தேன் வேறொன்றுமில்லை..!"

கந்தமாறன் இலேசாகச் சிரித்துவிட்டு, "இறை விதிக்கும் அதிகாரிக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை அவருக்குச் செலுத்தினோம். சுத்த வீரனுக்கு அளிக்க வேண்டிய வரவேற்பை உனக்கு அளித்தோம்! ஒரு காலத்தில், முருகன் அருளால், நீ இந்த வீட்டுக்கு மருமகப் பிள்ளையானால் தக்கவாறு மாப்பிள்ளை மரியாதை செய்து வரவேற்போம்!" என்றான்.

பிறகு, "வேறு என்னமோ சொல்ல வந்தாய்; அதற்குள் பேச்சு மாறிவிட்டது. ஆம், பழுவேட்டரையருடைய ஆசை நாயகி நல்ல சிவப்பு நிறம் என்று சொன்னாயே, அது எப்படி உனக்குத் தெரிந்தது?" என்றான்.

"கடம்பூர் மாளிகையின் கரிய பெரிய மத்தகஜத்தின் மீது பழுவேட்டரையர், எருமைக்கடா மீது யமதர்மன் வருவது போல் வந்து கொண்டிருந்தார்! என்னுடைய ஞாபகமெல்லாம் அவர் மேலேதானிருந்தது. ஒரு காலத்தில் அவரைப் போல் நானும் ஆகவேண்டும் என்று மனோராஜ்யம் செய்து கொண்டிருந்தபோது, அடுத்தாற்போல், ஒரு மூடுபல்லக்கு வந்தது.

மூடுபல்லக்கில் யார் வரக்கூடும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோதே பல்லக்கின் திரையை உள்ளிருந்து ஒரு கை சிறிது விலக்கியது. வில்க்கிய திரை வழியாக ஒரு முகமும் தெரிந்தது. கையும் முகமும் நல்ல பொன்னிறமாயிருந்தன! அவ்வளவுதான். நான் பார்த்ததெல்லாம்! நீ இப்போது சொன்னதிலிருந்து அந்தப் பெண் தான் பழுவேட்டரையரின் ஆசை நாயகி என்று ஊகிக்கிறேன்.

"வந்தியத்தேவா! நீ அதிர்ஷ்டக்காரன். ஆண் பிள்ளை எவனும் அந்தப் பழுவூர் இளையராணியைக் கண்ணாலும் பார்த்ததில்லை என்று பேச்சு. ஒரு விநாடி நேரமாவது அவள் கரத்தையும் முகத்தையும் நீ பார்த்தாயல்லவா? பார்த்த வரையில் அவள் எந்த தேசத்திலே பிறந்த சுந்தரியாயிருக்கலாம் என்று உனக்கு எதாவது உத்தேசம் தோன்றுகிறதா?" என்று கந்தமாறன் கேட்டான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

மண்ணூரில் மங்கம்மா பத்திரகாளி என்று பெயர் பெற்றவள். அவளுக்குப் பணத்தாசை மிக அதிகம். ஆனால் பணம் சம்பாதிக்கும் வழி ஒன்றும் அவளுக்குத் தெரியாது. அவளுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். அவர்கள் தந்தை இறந்து போனார். அவர் வைத்துப் போன பணத்தில் மங்கம்மா தன் இரு குழந்தைகளையும் வளர்த்துப் பெரியவர்களாக்கினாள்.

அவள் தன் மகள் லட்சுமியை எப்படியோ கல்யாணம் செய்து அனுப்பி விட்டாள். இனி மகன் கோவிந்தனுக்குத்தான் பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணைத் தேடிப் பிடித்துக் கல்யாணம் செய்து வைத்து வரதட்சணை, சீர் என்று நிறையப் பணம் வாங்கி விட வேண்டுமென்று மங்கம்மா எண்ணலானாள்.

கோவிந்தனுக்கு அரசாங்க வேலை. அதனால் பலர் அவனுக்குப் பெண் கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் மங்கம்மா வந்த சம்பந்தங்களை எல்லாம் ஏதோ ஒரு காரணம் சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தாள். அதற்குக் காரணம் பெண் கொடுக்க வந்தவர்கள் கொடுக்க முன் வந்த வரதட்சணையும் சீரும் மிகக் குறைவு என மங்கம்மா நினைத்ததுதான். கோவிந்தனோ தன் வீட்டிலிருந்து நான்கு வீடுகள் தள்ளியுள்ள கீதா என்ற பெண்ணை



## கீதா கல்யாணம்

மணக்க விரும்பினான்.

கீதா புத்திசாலி சூடிக்கையானவள். மிகவும் பொறுமையானவள். ஆனால் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். மேலும் அவளது தந்தை சோமுவுடன் மங்கம்மா சண்டையிட்டுப் பகைமை பாராட்டி வந்தாள். எனவே தனக்கும் கீதாவுக்கும் விவாகம் நடப்பதிலுள்ள சிரமத்தை கோவிந்தன் புரிந்து கொண்டான். அவன் கீதா [illegible] கேட்டான்.

கீதாவும் "உங்கள் அம்மாவின் மனதை மாற்ற வேண்டும். அப்போதுதான் நாம் மணந்து கொண்டு சுகமாக வாழ முடியும். நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வது எனத் தீர்மானித்து விட்டதால் முதலில் அதற்கான வழி காண்போம்" என்றாள்.

கோவிந்தனும் "ஆமாம் என் அம்மாவின் மனதை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல நீதான் பொறுமையாக எதையும் செய்ய வேண்டும்" என்றான். கீதாவும் "இன்னும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு திட்டத்தோடு வருகிறேன்" என்றாள்.

கீதா தன் தந்தையோடு கலந்து ஆலோசித்து ஒரு திட்டம் போட்டு அதனை கோவிந்தனிடம் தெரிவித்தாள்.

அதற்கு ஒரு வாரத்திற்குப் பின் ஒரு விசித்திர சம்பவம் நிகழ்ந்தது.

அன்று கீதா வாசல் தெளிக்க காலையில் வீட்டிற்கு வெளியே வந்த போது வீட்டு வாசலில் ஒரு கிழ சன்னியாசி விழுந்திருப்பதைக் கண்டாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 116




சாதாரண ஏவுகணைகள் வந்து தாக்கும்போது அதன் பாதிப்பை தாங்கும் அளவுக்கு ரஷ்ய டாங்கிகளில் பாதுகாப்பு அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் ஜாவெலின் ஏவுகணைகளில் இரண்டு தொகுப்பு வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் ஒன்று கவசத்தைப் பிளக்கிறது. இரண்டாவது வெடிபொருள் டாங்கியின் அடிப்பாகத்தைத் துளைக்கிறது.




### கமிகேஸ் டிரோன்

ஏவுகணைகள் இலக்கை நோக்கிப் பயணிக்கும்போது பாதி வழியிலேயே மறித்துத் தாக்கக்கூடிய ஆற்றல் பெற்றவைதான் இந்த கமிகேஸ் டிரோன்கள். இதில் ஸ்விட்ச்ப்ளேட் 300, ஸ்விட்ச்ப்ளேட் 600 என்று இரண்டு வகை டிரோன்கள் இருக்கின்றன. இரண்டுமே 1.3 மீற்றர் நீளம் கொண்டவை. இதில் ஸ்விட்ச்ப்ளேட் 600 வகை டிரோன்கள் அதிக தூரம் பயணிக்கக்கூடியவை. நிலம், நீர், ஆகாயம் என மூன்றிலிருந்தும் இந்த வகை டிரோன்களை ஏவ முடியும். ஒன்றின் விலை கிட்டத்தட்ட US$ 6,000 ஆகும்.




### ஸ்ட்ரிங்கர்

வீரர்கள் கையில் எடுத்துச் செல்லும்படியான வான் பாதுகாப்பு கருவிதான் ஸ்ட்ரிங்கர. இராணுவத்தினர் தோள்பட்டை மீது வைத்து எதிரிகளின் இலக்கை எளிதாகத் தாக்குவதற்கு இந்த ஸ்ட்ரிங்கர்கள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா, 600 இற்கும் அதிகமான ஸ்ட்ரிங்கர்களை உக்ரைனுக்கு வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. ஜேர்மனியும் நூற்றுக் கணக்கான ஸ்ட்ரிங்கர்களை உக்ரைனுக்குக் கொடுத்திருக்கிறது. வான்வெளியில், குறைந்த உயரத்தில் பறக்கும் போர் விமானங்கள், ஹெலிகொப்டர்களை அழிக்க உதவுகிறது இந்த ஸ்ட்ரிங்கர்.




ஒரு ஸ்டிங்கர் ஏவுகணையின் விலை 1980 ஆம் ஆண்டுக்கு சுமார் $38000 முதல் $40000 ஆகும். தற்போது இதன் விலை $119000 முதல் $120000 வரை உள்ளது. இது உற்பத்தியாளரால் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரபூர்வ விலையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒன்று அல்லது பல ஸ்டிங்கர்களை, முன்னாள் முஜாஹிதீன் தீவிரவாதிகளிடம் இருந்து பெற முடிந்தது. மேலும் நவம்பர் 10, 1997 அன்று இலங்கை விமானப்படையின் Mi-24 I வீழ்த்துவதற்கு குறைந்தபட்சம் ஒன்றைப் பயன்படுத்தியதாக அறியப்படுகிறது.

### NLAW ஏவுகணைகள்

NLAW ஏவுகணைகளும் தோள்பட்டை மீது வைத்துத் தாக்குதல் நடத்தக்கூடிய ஆயுதம்தான். பீரங்கிகள், கூட்டமாக வரும் படைவீரர்களை அழிக்க இந்தவகை ஏவுகணைகளைப் பயன்படுத்துகிறது. NLAW ஆனது கட்டடத்தின் உயரத்திலிருந்து மரத்தின் பின்புறம் அல்லது பள்ளம் வரை எந்த் நிலையிலிருந்தும் தாக்க முடியும். உக்ரைன் இராணுவம். இங்கிலாந்து. ஜேர்மனி, நோர்வே, சுவீடன் உள்ளிட்ட நாடுகள் ஆயிரக் கணக்கில் NLAW ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கியிருக்கின்றன.




ஒரு சிப்பாய் ஆயுதத்தை கையிலிருந்து தோளுக்கு மாற்றி எதிரியை நோக்கி சுடத் தயாராக இருக்க 5-6 விநாடிகள் போதுமானதாகும். போர் வீச்சு 20-800 மீ ஆகும். விலை US$30,000-40,000 ஆகும்.

(தொடரும்)

# அணு ஆயுத மோதலை தவிர்க்கவே ரஷ்யா விரும்புகிறது- புடின்

(மொஸ்கோ)

**அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் யாருக்கும் வெற்றி கிடைக்காது என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.**



அணு ஆயுதப் போர் எப்போதும் நிகழக்கூடாது என்றும், உக்ரைன் விவகாரத்தில் மேற்கத்தேய நாடுகள் அணு ஆயுதப் போரைத் தூண்டி விட வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அணு ஆயுத மோதலை தவிர்க்கவே ரஷ்யா விரும்புவதாகவும் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் அணு உலைகள் பாதுகாப்பு குறித்து சர்வதேச அணுசக்தி கழகம் கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் ரஷ்யாவின் அணு ஆயுத நிலைப்பாடு மற்றும் கொள்கை குறித்து அவர் விளக்கம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதல்களால்

# 4.5 மில்லியன் மக்களுக்கு உக்ரைனில் மின்தடை



(கீவ்)

உக்ரைனில் 4.5 மில்லியன் மக்களுக்கு மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாக, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

சமீபத்திய வாரங்களில், உக்ரைனிய மின் நிலையங்கள் மீது ரஷ்யா பெரிய அளவிலான ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியது.

போர்க்களத்தில் தொடர்ச்சியான வலிமிகுந்த தோல்விகளுக்குப் பிறகு, ரஷ்யா முன்னணியில் இருந்து நகரங்களில் மின்சார உட்கட்டமைப்பு மீது சமீபத்திய வாரங்களில் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது.

ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் கூற்றுப்படி, கடந்த மாதத்தில், நாட்டின் மின் நிலையங்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. உக்ரைனிய அரசாங்கம், இதன் விளைவாக ஆற்றலைச் சிக்கனமாகப் பயன்படுத்த முயற்சிக்குமாறு மக்களை வலியுறுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. (நி)

# ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல்

## இருவர் காயம்

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீர் பிரதேச அந்தநாக் பகுதியில் பாடசாலை ஒன்றில் தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் இரண்டு புலம்பெயர் தொழிலாளிகள் காயமடைந்துள்ளதாக ஜம்மு-காஷ்மீர் பிரதேச பொலிஸார் தெரிவித்துள்ளனர். இருவரும் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் பிரதேசத்தில் பிரதேசவாசிகள் அல்லாத நபர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் தீவிரவாத நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் அடுத்த வருடம் நிறைவடையும்-நீதி அமைச்சு

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான அனைத்து விசாரணைகளும் அடுத்த வருட இறுதியில் முடிக்கப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் உடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதியமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கையில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக 21 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதையும் சட்ட முறைமையை புதுப்பிப்பதற்கு பல புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை குறித்தும் வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகள் உள்ளிட்ட நலன்புரித் திட்டங்களுக்கும் தூதுவர் தமது பாராட்டுகளை தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே, காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் அடுத்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் முடிக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (நி)

# எரிவாயு விலைத்திருத்தம் நாளை வெளியீடு

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு போதுமான அளவு கையிருப்பில் உள்ளதால், எரிவாயு வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சில விநியோகஸ்த்தர்கள் உரிய நேரத்தில் முன்பதிவுகளை மேற்கொள்ள தவறியதால், தற்போது சில இடங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலைமை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு பின்னர் முழுமையாக தீர்க்கப்படும்.

இதேவேளை, லிட்ரோ எரிவாயு விலைத் திருத்தம் தொடர்பான அறிவிப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## ராஜா பிளாசா மாதிரிக்கிராமம் 100 வீட்டுத்திட்ட வீட்டுப்பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு

தலைவர்
கணிதச்சுடர் திரு.சண்.வாமதேவன்
(ஓய்வுநிலை அதிபர்)
காலம்:**05.11.2022, சனிக்கிழமை**
நேரம்:**மாலை 03.30 மணி**
**இடம்: இராஜேஸ்வரி திருமண மண்டபம்**
(பலாலி வீதி. கோண்டாவில்)
பிரதம விருந்தினர்
உயர்திரு.**நாகலிங்கம் வேதநாயகன்**
(ஓய்வுநிலை மாவட்ட செயலர்-மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்)
கல்விக் கொடையாளர்
திரு.திருமதி.**இராசையா குவேந்திரநாதன் றஞ்சினிதேவி**
**(உரிமையாளர்-ராஜா பிளாசா கோண்டாவில்)**
சிறப்பு விருந்தினர்கள்
**உயர்திரு.சுப்பிரமணியம் முரளீதரன்**
(உதவி அரசாங்க அதிபர் (காணி)-மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்)
உயர்திரு.**தவச்செல்வம் முகுந்தன்**
(பிரதேச செயலர்-பிரதேச செயலகம்-உடுவில்)
**திருமதி.சுபாசினி மதியழகன்**
(பிரதேச செயலர்-பிரதேச செயலகம் -கோப்பாய்)
கலாநிதி.**செல்லத்துரை திருமாறன்**
(உரிமையாளர்-இராஜேஸ்வரி திருமண மண்டபம்-கோண்டாவில்)
**மேற்படி நிகழ்வு இனிதே நடைபெற இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்!**

**ஐங்கரன் களஞ்சியம்**
**இல.9, பலாலி வீதி, திருநெல்வேலி.**

(83347)


# இலங்கையில் 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை

## ஐ.நா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குறைந்தது 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த அலுவலகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

இது நாட்டின் சனத்தொகையில் 26 வீதத்திற்கு சமம் எனவும் 96 வீதமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரிக்க இலங்கையின் ஒன்பது மாகாணங்களின் 11 மாவட்டங்களில் உள்ள 2 ஆயிரத்து 871 குடும்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம்:** 05.11.2022 சனிக்கிழமை தொடக்கம் 11.11.2022 வெள்ளிக்கிழமை வரை
**நேரம்:-** மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

**தலைமை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்**
**(தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பர்ணம் அறிவுத்திருக்கோவில்)**

அறிமுகவுரை:-மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி மு.சுபாஷினி அவர்கள் (இந்தியா)

பயிற்சிகளை வழங்குபவர்கள்:-துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன்
துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

❖ அகத்தாய்வு 1 பயிற்சிகள் 05.11.2022 & 06.11.2022 காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை நடைபெறும்.

❖ 07.11.2022 திங்கட் கிழமை பௌர்ணமி தினத்தன்று "மௌன நோன்பு" பேராசிரியர் V.பாஸ்கரன் அவர்களால் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.00 மணிவரை நடைபெறும்.

(C–5212)

தொடர்புகளுக்கு:- **யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 07[illegible] 077 736 8745



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா:சூரி 11 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: லண்டன்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/10237 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா:53 சூரி 3 செவ் 1 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:BBA, DO<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/10979 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா:13 சூரி 9 செவ் 4 இல்<br>உயரம்:5' 11"<br>தகைமை/தொழில்: A/L கட்டட மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு:தொழில் இருப்பின் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10239 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 4<br>கி.பா:28 சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:BA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர் அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/10991 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 29 ½ சூரி 6 செவ் 5 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:BSc,MSc IT Engineer<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: B/10242 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:பரணி 3<br>கி.பா:72 ¾ சூரி. செவ் 7 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:BSc பட்டதாரி<br>தொ.இ:G/10994 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா:சூரி.செவ் 10 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:A/L (சொந்தக்கடை சாரதி மின்ணிணைப்பாளர்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண் சுயதொழில் செய்பவர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10244 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா:36 சூரி. செவ் 5 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/10995 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச் சிறந்த பலசாலி நீதான்.
~ அன்னை தெரேசா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரவுகிறது டெங்குக் காய்ச்சல் நீவிர் இன்னும் துயிலுதியோ!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றுரைத்த நம் தமிழ் மொழியின் சிறப்பு எத்துணை உயர்வானதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனை கோடி செல்வம் இருப்பினும் நோய் வந்துவிட்டால் அந்தச் செல்வம் பயனற்றதாகவும் அழிந்தும் போகும்.

ஆக, குறைவற்ற செல்வம் எதுவென்றால், அது நோயற்ற வாழ்வு என்பதாகவே இருக்க முடியும்.

இதை நாம் கூறும்போது நோய் வந்தால் என்ன? அவ்வளவு மோசமானதா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறானதொரு கேள்வி எழலாம் என்ற அடிப்படையில், நோய் கொண்டார் பேய் கொண்டார் என்று நம்மவர்கள் விளக்கம் கூறிவைத்தனர்.

எனவே நோயின்றி வாழுகின்ற வாழ்வு பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

எனினும் இன்றைய மனித சமூகம் புதுப் புது நோய்களுக்கு ஆளாக வேண்டிய அபத்தத்திற்கு ஆளாகியுள்ளது.

ஆம், கொரோனா என்ற பெருந்தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்து இலட்சக்கணக்கான மனித உயிர்களைக் காவு கொண்டுவிட்டது.

இன்னமும் அதன் அபாயம் நீங்கிய பாடில்லை.

அதிலும் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்டமெனத் தடை மருந்தேற்றியவர்கள் இப்போது கூறுகின்ற உடல் உபாதைகள் பற்றி எவரும் கவனத்தில் எடுக்க மறுக்கின்றனர்.

அதுபற்றி உலக நாடுகள் ஏதேனும் கூறினால் மட்டுமே நம் மருத்துவத்துறை அது தொடர்பில் கவனம் செலுத்தும்.

அதுவரைக்கும் பக்கவிளைவுகள் பற்றிக் கூறுகின்ற பொதுமக்களுக்கு பேச்சு அர்ச்சனை மட்டுமே மருத்துவ சமூகம் தரக்கூடிய மருந்து.

இவை ஒருபுறமிருக்க, பருவகால மழையோடு படையெடுக்கின்ற தொற்று நோய்களுக்கு முகங்கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டியுள்ளது.

அதிலும் குறிப்பாக டெங்குத் தொற்று வேகமாகப் பரவுவது குறித்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பொது வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

டெங்குத் தொற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்து நாம் அறியாததல்ல.

எனவே டெங்குநோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இல்லாமல் செய்வதனூடாக டெங்கு நோயில் இருந்து நாம் தப்பிக்க முடியும்.

அதிலும் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை சுகாதாரப் பிரிவு இனங்கண்டு இல்லாதொழிக்க வேண்டும் என்று நினையாமல், நாம் ஒவ்வொருவரும் எங்கள் வீட்டுச் சூழலையும் அயலையும் துப்புரவாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்களை இல்லாது செய்து அதன் மூலம் டெங்கு அபாயத்தில் இருந்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# கடற்றொழில் அனுபவமுள்ளவர்களுக்கு கொரியாவில் தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

கடற்றொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு கொரியாவில் கடற்றொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் தென் கொரிய சர்வதேச கூட்டுறவு கடற்றொழில் அமைப்பின் தலைவர் Im Joon Teak ஆகியோருக்கிடையில் வெற்றிகரமான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்படி, மீன்பிடித் தொழில் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் இரு தரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர். தென் கொரியாவின் சியோல் நகரில் உள்ள இலங்கை தூதரகமும் கொரிய அரசும் இதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளன.

கொரிய மீன்பிடித் தொழிலுக்காக தற்போது E9 விசா வகையின் கீழ் இணைத்துக்கொள்ளும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், கொரிய மீன்பிடி வேலைகளுக்காக இரண்டு முறை சென்ற தொழிலாளர்கள் மீண்டும் அந்த வேலை வாய்ப்பைப் பெறுவது குறித்தும் இந்த கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, E7 அல்லது E10 வகை விசாக்கள் மூலம் இந்த வாய்ப்பை வழங்குவது குறித்து மேலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரிய மீன்பிடித் துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவிக்குமாறு, கொரிய சர்வதேச கூட்டுறவு சங்கத்தின் தலைவரிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டார். இதற்கு அவர்களிடம் இருந்து நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. (4-7)

## மைத்திரிக்கு கொவிட்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, அவர் கொழும்பு ஐடீச் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி)

## சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் தேசிய இளைஞர் வலையமைப்பினால் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு யாழ். மாவட்டத்தில் (Centere for children's happiness) நிறுவனத்தின் வழிநடத்தலுடனும் child fund நிறுவனத்தின் அனுசரணையுடனும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது. (6)

## மசகு எண்ணெய் விலை மேலும் குறைந்தது

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை மேலும் குறைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவின் எரிபொருள் கேள்வி குறைந்ததாலும் அமெரிக்காவில் வட்டி விகிதம் மீண்டும் உயரும் என்ற ஊகத்தாலும் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 94.45 டொலர் வரை குறைந்துள்ளது. (நி)

## ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொதுநூலகத்தினால் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்களுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

"ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வாசிப்பு செயற்பாட்டங்கள்" எனும் தலைப்பில் வட. கோவை வரதாஜனின் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளதானால் மாணவர்களின் பெற்றோர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வலி.கிழக்குப் பிரதேச சபை நூலக அலுவலர் அறிவித்துள்ளார். (6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** கீறின் கிறாஸ் விடுதி, புகையிரத நிலையம்-யாழ்ப்பாணம், யாழ்.கேட், டான் டிவி, அடைக்கல மாதா தேவாலயம்-மருத்துவமனை வீதி, பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்-மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ். மாவட்ட செயலகம், துளசி மஹால், யு.எஸ். விடுதி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி, முதலியவற்றிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இலங்கை வங்கி கிளிநொச்சி, பிருந்தா உற்பத்தியாளர், கார்கில்ஸ் புட் சிற்றி, கச்சேரி, மக்கள் வங்கி- கிளிநொச்சி, சதோசா-கிளிநொச்சி, சிவ குரு அரிசி ஆலை, சிவன்ருட் செல்வன் அரிசி ஆலை, விளையாட்டு வளாகம், சன் தனபாடங்கள், நீர்வழங்கல் சபை-கிளி நொச்சி, கிங்ஸ் விடுதி, 58 ஆவது பிரிவு இராணுவ முகாம்-கிளிநொச்சி, புதிய கச்சேரியின் முன்வளாகத்தடி, கந்தசாமி கோவில், கரடிபோக்கு, கிளிநொச்சி நகரம், சம்பத் வங்கியடி-கிளி நொச்சி, விதை உற்பத்தி பண்ணையடி, வானவில் திருநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## புதிய அமைச்சரவை நியமனம்?

(கொழும்பு)

எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் புதிய அமைச்சரவையை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் இறுதியாக இருந்த அமைச்சரவையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறிய மாற்றங்களுடன் தற்காலிகமாக மாற்றியமைத்திருந்தார்.

நிரந்தர அமைச்சரவையை நியமிக்க திகதிகள் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் பொதுஜன பெரமுனவுடன் இணக்கத்தை ஏற்படுத்த முடியாத காரணத்தினால், நிரந்தர அமைச்சரவையை நியமிக்க முடியாமல் போனதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வார இறுதியில் எகிப்துக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

அங்கிருந்து நாடு திரும்பியதும் புதிய அமைச்சரவை நியமிக்கப்படக் கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்."

-அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2023
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச் சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், பொதுமலசலகூடம் மற்றும் இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை, சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : | 21.11.2022 பி.ப 2.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | : | 22.11.2022 பி.ப 2.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : | 22.11.2022 பி.ப 2.30 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம் |

01. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் *"தவிசாளர், வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை மானிப்பாய்"* என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்குமுன் போடப்படுதல் வேண்டும்
02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசியஅடையாளஅட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராமஅலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சிமன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்டஎவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி ல்வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
06. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்குஅமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோஅல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு எடுப்பவர்கள் நடாத்துவதற்குரிய இடத்தினைத் தாங்களே தெரிவுசெய்தல் வேண்டும்.
09. மானிப்பாய் சிறுவர் பூங்காவில் சிற்றுண்டி விற்பனையில் ஈடுபடுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சுகாதார விதிகளுக்கமைய தற்காலிக அமைப்பை குத்தகைதாரரே ஏற்படுத்த வேண்டும்.
10. மாதவாடகையானது விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
11. அரசாங்கத்தினால் காலத்திற்குகாலம் விதிக்கப்படும் வரியினை செலுத்துதல் வேண்டும்.
12. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3பகுதியை உரியகாலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும்.
13. கேள்விப்பத்திரங்களை தலைமைஅலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
14. நாட்டில் ஏற்படக் கூடிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம்
15. குத்தகைதாரர் அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட வாகனத்தரிப்பிட கட்டண விபரம். துவிச்சக்கரவண்டி ரூபா:-10/=, மோட்டார் சைக்கிள் , ரூபா:-20/=

| | பொதுச் சந்தைகள், (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம்,பொதுமலசலகூடம்). இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | மானிப்பாய் பொதுச் சந்தை (மீன் சந்தை,மரக்கறிச் சந்தை, துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் மற்றும் பொது மலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 27,000.00 | 2,719,750.00 | |
| 02 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை (புதியகட்டடத் தொகுதி) | 1,000.00 | 1,850.00 | 184,800.00 | 600.00 |
| 03 | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 12,000.00 | 1,227,600.00 | 600.00 |
| 04 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 72,600.00 | 600.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | காக்கைதீவுப் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 8,000.00 | 799,755.00 | |
| 02 | காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம். (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்குமாத்திரம்) | 500.00 | 2,000.00 | 19,030.00 | |
| 03 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 2,500.00 | 264,125.00 | |
| 04 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 22,000.00 | 300.00 |
| 05 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 425,700.00 | 400.00 |
| 06 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 2,500.00 | 277,200.00 | |
| 07 | ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 224,070.00 | |
| 08 | மானிப்பாய் சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை (தற்காலிகமானது) | 1,000.00 | 1,500.00 | 157,080.00 | |
| பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை | 1,000.00 | 27,000.00 | 2,701,050.00 | |
| 02 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 410,815 | 2,250.00 |
| 03 | பண்டத்தரிப்புச் சாந்தைச் சந்தை | 1,000.00 | 6,000.00 | 627,000.00 | |
| 04 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 16,000.00 | 1,602,470.00 | 2,250.00 |
| 05 | பண்டத்தரிப்பு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 500.00 | 13,200.00 | |
| பண்டத்தரிப்புகிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 247,500.00 | |
| 02 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 115,500.00 | 800.00 |
| 03 | இளவாலைப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 199,100.00 | |
| 04 | இளவாலைப் பொதுச் சந்தைகோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 72,290.00 | |
| 05 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 287,760.00 | |
| 06 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 28,690.00 | 750.00 |
| 07 | மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 236,060.00 | 750.00 |
| 08 | இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 535,910.00 | |
| 09 | மாகியப்பிட்டி பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3,500.00 | 369,875.00 | 800.00 |

**அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை,**
**மானிப்பாய்**

(C-5217) **2022.11.04**

# சீனாவுடன் கைகோர்க்க தயாராகும் ரணில்

(கொழும்பு)

சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் எதிர்காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார உறவுகளை மேலும் மேம்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காணொளி மூலம் உலகின் முதல் மற்றும் மிகப்பெரிய சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சியின் ஆரம்ப விழாவில் உரையாற்றும் போது ரணில் இவ்வாறு தெரிவித்தார். (4-7)

# மாகாண சமூக சேவைகள் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் 2022

### மாற்றுத் திறனாளிகளுக்கான கட்டுரை / கவிதை / ஓவியப்போட்டிகள்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வையும் கவனத்தையும் ஈர்க்கும் பொருட்டு கட்டுரை மற்றும் கவிதை ஓவியப்போட்டிகளுக்கு மாற்றுத்திறனாளிகளிடமிருந்து போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. ஆக்கங்கள் அனைத்தும் பணிப்பாளர் சமூக சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணம் கைதடி என்னும் முகவரிக்கு 20.11.2022 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாற்றுத் திறனாளிகள் தின கட்டுரை/ கவிதை / ஓவியப்போட்டி - 2022" என தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதோடு ஆக்கங்கள் பின்வரும் தல்லயங்கங்களில் ஏதாவது ஒன்றில் ஒருவர் ஒரு ஆக்கத்தினை மட்டும் சமர்ப்பித்தல் போதுமானது. கவிதை கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் 18 வயதிற்குட்பட்ட மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கென இரு பிரிவுகளாக நடாத்தப்படும்

**கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிக்கான தலைப்பு**

1. சம கால சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகளின் பங்கு
2. மாற்றுத் திறனாளிகளின் அபிவிருத்தியில் சமுதாயத்தின் பங்கு
3. நவீன உலகில் மாற்றுத் திறனாளி சிறார்களின் கல்வி முன்னேற்றம்

**நிபந்தனைகள்**

1. கவிதை / கட்டுரை ஆக்கங்கள் A4 தாளில் ஒரு பக்கத்தில் உறுப்பமைய எழுதி அல்லது கணனியில் தட்டச்சு செய்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்
2. ஓவியங்கள் ( 22 1/2 × 28 1/2 ) A3 தாளில் வரைந்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்
4. கருத்தை சித்தரிக்கும் ஓவியங்களாக அமைதல் வேண்டும்
5. பெஸ்ரல் நீர்ச்சாயம் பென்சில் போன்ற எந்தவொரு வர்ணங்களும் பயன்படுத்தலாம்
6. டிஜிற்ரல் ஓவியங்கள் மற்றும் படத்தொகுப்பு ஓவியங்கள் பயன்படுத்தலாகாது
7. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தை சார்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் பங்குபற்றலாகாது.
8. போட்டிகளில் வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட மாற்றுத் திறனாளிகள் மாத்திரம் பங்குபற்ற முடியும்.

**1. 18 வயதிற்குட்பட்டமாற்றுத்திறனாளி மாணவர்களுக்கானது**

1. ஆக்கம் மாணவரால் எழுதப்பட்டது என்பது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு பாடசாலை ஊடாகவே அனுப்பிவைக்கப்படல் வேண்டும்
2. கட்டுரை 500-600 சொற்களில் அமைதல் வேண்டும்
3. கவிதை 15-20 வரிகளில் அமைதல் வேண்டும்

**2. 18 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கானது**

1. ஆக்கம் மாற்றுத்திறனாளியினுடையது என்பதை தாங்கள் வதியும் பிரதேச செயலக சமூக சேவை அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
2. கட்டுரை 1000 - 1100 சொற்களில் அமைதல் வேண்டும்
3. கவிதை 30 - 35 வரிகளில் அமைதல் வேண்டும்

நடுவர்களின் இறுதித் தீர்ப்பு அமைவாக மாகாண மட்டத்தில் ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்

**பணிப்பாளர்**
**சமூகசேவைகள் திணைக்களம்**
**வடமாகாணம்** (C-5216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்கு அம்...

அறிகுறிகளின் காரணமாக அந்த நபர் கொழும்பு ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, அவருக்கு மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போதே, அவர் குரங்குக் காய்ச்சலால் பாதிக் கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (4-7)

## நீரிழிவு நோயா...

தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்பில் மிக அண்மைய தரவுகளின்படி கொழும்பு மாவட்டத்தில் குறிப்பாக மேல் மாகா ணத்தில் 30% மானவர்களுக்கு நீரிழிவு நோயின் தாக்கம் காணப்படுகின்றது யாழ்ப்பாண மாவட்டத்தில் 15% சதவீத மானவர்களுக்கு நீரிழிவுநோயின் தாக் கம் காணப்படுகின்றது. நீரழிவு நோய் தொடர்பிலான ஆய்வுகளை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின் றோம்.

குறிப்பாக கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இந்த கொவிட் காலப் பகுதி யில் இளைஞர் யுவதிகள் அதாவது 20 - 40 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. (4-7,104)

## ஆசிரியர்கள்,...

துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அவர் இந்த அறி விப்பை வெளியிட்டுள்ளார்.

முன்னதாக ஆசிரியர்களின் உடையை மாற்றி பாடசாலைக்கு வருவதற்கு வசதி யான ஆடையை அணிய இடமளிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செய லாளர் ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார்.

எனினும், சில ஆசிரியர்கள் இதற்கு இணங்கவில்லை. அத்துடன், ஆசிரியர் களுக்கு இலகு ஆடைகளை அனுமதிப்பது கலாசார சீர்கேட்டுக்கு வழிவகுக்கும் என்றும், இதனை ஒருபோதும் அனுமதிக் கக்கூடாது எனவும் மகாசங்கத்தினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஆசிரியர்களுக் கான ஆடைச் சுதந்திரத்தால் கலாசாரம் சீர்கெடாது என வலியுறுத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இந்த விடயத்தில் கல்வியமைச்சர் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்றார் இதற்கு பதிலளிக்கும் வகையில் கல்வி அமைச்சர் இந்த அறிப்பை விடுத்துள்ளார். (4-7)

## மின்வெட்டு...

வெளியிட்டுள்ளது.

இதன்படி, 1 மணித்தியால மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இல ங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இதற்கான அனு மதி வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

இதற்கமைய, A,B,C,D,E,F,G,H,I,J ,K,L,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்க ளுக்குட்பட்ட பகுதிகளில் 1 மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது.

மேற்குறித்த பகுதிகளில் மாலை 5.30 முதல் இரவு 8.30 வரையான காலப் பகுதிக்குள் சுழற்சி முறையில் 1 மணி நேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. (4-7)

## ரயில் மோதிய...

இச்சம்பவம் புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞனை அதே புகையிரதத்தில் ஏற்றி மீளத் திரும்பி யாழ்ப்பாணம் புகை யிரத நிலையத்திற்கு கொண்டுவரப் பட்டது.

இதையடுத்து நோயாளர் காவு வண்டி யில் ஏற்றி யாழ். போதனா வைத்தியசா லையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டவர் சிகிச்சை பலனின்றி மாலை உயிரி ழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் பாண்டியன் தாழ்வுப் பகுதியைச் சேர்ந்த 21 வயது டையவர் என தெரியவருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப் பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7,60)

## ஓய்வுக்கு முன்னர்...

ஒன்றை நடத்தி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வீட்டில் நடைபெற்ற இந்த விசேட பேச்சு வார்த்தையில், பவித்ரா வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ; நாமல் ராஜபக்ஷ உட்பட மொட்டுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் கலந்துக் கொண்ட தாக தெரியவருகிறது.

பொதுஜன பெரமுன அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ள போதிலும் அர சாங்கத்திற்குள் தமது கட்சி நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றதே தவிர வேறு எதுவும் நடக்கவில்லை என கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் தெரிவித்துள்ள னர்.

இதற்குத் தீர்வாக மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவியில் கட்டயாம் நியமிக்க வேண்டும் என கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பி னர்கள் யோசனை முன்வைத்ததாக தகவல்கள் கூறுகின்றன. (4-7)

## வயிற்றுப்பசிக்...

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இந்தியா உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்க ளுக்கும் இடம்பெயர்ந்து சென்று யுத்தம் முடிவடைந்த பின் 84 வரையிலான குடும்பங்கள் அப்பகுதியில் மீள்குடி யேறினர். அம் மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்காமையால் மீளவும் பல குடும் பங்கள் அங்கிரு ந்து வெளியேறிய நிலையில் 15 குடும் பங்கள் வரையில் தற்போது அங்கு வசித்து வருகின் றனர். அம்மக்கள் தமது வாழ்வாதா ரத்திற்காக தமது வீடுகளுடன் இணைந்த காணித் துண்டங்களில் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய் கை என்பவற்றை மேற்கொள்வதற்காக காணிகளை உழுது பயிரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அங்கு சென்ற வன வளத் திணைக்க ளத்தினர் அது வன வளத்திணைக்க ளத்திற்குரிய காணி எனத் தெரிவித்து அவர்கள் பயிற் செய்கை நடவடிக் கையில் ஈடுபட தடை விதித்துள்ள துடன், உழுதுபயிற் செய்கையில் ஈடுபட் டவர்களுக்கு எதி ராக நெடுங்கேணி பொலிஸில் முறைப் பாடு செய்துள்ள னர்.

முறைப்பாட்டை யடுத்து வவுனியா வடக்கு, காஞ்சிர மோட்டைப் பகுதி யைச் சேர்ந்த இரு வர் கைது செய்யப் பட்டு வவுனியா நீதி மன்றில் முற்படுத் தப்பட்ட நிலையில் நேற்று பிணை யில் விடுவிடுவிக் கப்பட்டுள்ளனர். (4-7,250)

## யாழ். மாவட்டத்...

இரண்டாயிரத்து 530பேர் பாதிக்கப் பட்டிருந்த நிலையில், 2021ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 301பேராக குறைந்திருந் தது. தற்போது மீண்டும் அதிகரிப்பை கண் டுள்ளது எனவும் குறிப்பிட்டார். (4-7,33)

## தமிழர்களுக்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசி யல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக் கும் எனவும், சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக் கும் எனது பதவிக் காலத்தில் தீர்வு காண் பேன் என ரணில் விக்கிரமசிங்க அண் மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியும் வருகின்றேன் எனவும் அவர் தெரிவித்திருந் தார்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ள நிலையில், தீர்வு விடயத்தில் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என சிவாஜிலிங்கம் பதில் வழங்கியுள்ளார். (4-7)

### மஹஜன சம்பத

திகதி 2022/11/04
சீட்டிழுப்பு இலக்கம் 4929
ஆங்கில எழுத்து: D — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 7 4 6 3 2 1
தேசிய லொத்தர் சபை

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 238
வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 05 07 29 47 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 04/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1277
வெற்றி எழுத்து: S — சுப்பர் இலக்கம்: 15 — வெற்றி இலக்கங்கள்: 13 17 63 71

### கொவிசெத

திகதி 2022.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 3171
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 28 35 61 79
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2022.11.04
சீட்டிழுப்பு இலக்கம் - 959
ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 01 08 10 77
NATIONAL LOTTERIES BOARD

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 04/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1384
வெற்றி இலக்கங்கள்: மீனம் 2 6 1 4 3 1
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1730
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2022.11.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,763,380/-
வெற்றி இலக்கங்கள்: 06 07 14 25 — ஆங்கில எழுத்து: J

### சனிதா (Shanida)

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.11.04
சீட்டிழுப்பு இல: 4065
வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,994,600/-
வெற்றி இலக்கங்கள்: 21 24 28 43 — ஆங்கில எழுத்து: R

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 244
சீட்டிழுப்பு திகதி 2022.11.04
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 13 16 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,086,000/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,327,147.40
திகதி 2022-11-04
வெற்றி வாரம் 3616
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்: 01 33 41 42 — துலாம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,823,240/-

### வாராந்த லொத்தர்

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: S 11 16 25 53 69
சீட்டிழுப்பு வாரம் 1080
வர்ணம் ஊதா
திகதி 2022.11.04 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 274,739,351.80
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1904
சீட்டிழுப்பு திகதி 2022.11.04
நிறம் இளஞ்சிவப்பு
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: F 02 05 18 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,409,780/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

இலங்கை மதுபானசாலைகளின் உரிமையாளர் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி யாழ். நகரில் உள்ள Jetwing Hotel இல் காலை 9.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆகையால் யாழ்.பிரதேசத்தில் உள்ள அனைத்து மதுபானசாலை உரிமையாளர்களும் வருகை தந்து தங்களது கருத்துக்களை கலந்துரையாடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

இலங்கை மதுபானசாலை
உரிமையாளர்கள் சங்கம்

(977)


**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI, British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழின் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 7/11/2022 Mon 9 am
SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-5198)

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | சாவகச்சேரி | சுன்னாகம் | [illegible] | [illegible] |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |


உ

ஓம் சக்திமயம்

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

### அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் தற்கால சூழல் என்ற கருப்பொருள் தொடர்பான ஓர் கலந்துரையாடல் நடாத்த வேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டுள்ளது. எனவே ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள், மஹோற்சவ உபயகாரர்கள், அலங்கார உற்சவ உபயகாரர்கள், ஏனைய விழா உபயகாரர்கள், சமூகப் பெரியார்கள், அம்பாளின் அடியார்கள், சமய, ஆன்மீக வல்லுனர்கள் போன்றோரை எதிர்வரும் 06.11.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் ஒன்றிணைந்து தங்களின் ஆக்கபூர்வமானதும் மேலானதுமான கருத்துக்களை வழங்குமாறு அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

தெளிவே என் சிந்தனை

இங்ஙனம்
இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவும்
மேற்படி தேவஸ்தானம்.

(C-5203)


B, O குருதி வகையைச் சேர்ந்த
**சிறுநீரகம் தேவை**

$B^+$ குருதியுடைய 26 வயது ஆண் ஒருவருக்கு B, O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு:- (13337)
**077 311 9361**


## ரொட்டிக்கு கட்டுப்பாட்டு விலையில்லை

(கண்டி)

ரொட்டிக்கு கட்டுப்பாட்டு விலை இல்லை. பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டாலும், அதற்காக சட்டநடவடிக்கை எடுக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(4-7)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை கதிராசிப்பிள்ளை (செல்லம்)

மண்ணில் 08.12.1930 — விண்ணில் 01.11.2022



யாழ்.பலாலியைப் பிறப்பிடமாகவும் வசாவிளான்/ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கதிராசிப்பிள்ளை (செல்லம்) அவர்கள் கடந்த 01.11.2022 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - குட்டிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அம்பலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை மற்றும் காசித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சத்திவேல் (சிறி) மற்றும் யோகராசா (சின்னண்ணை), திருமதி யோகராணி இராஜகோபால், செல்வச்சந்திரன் (ராசன்), இராசயோகம் (யோகன் - டென்மார்க்), தவராசா (தவம் - சுவிஸ்), திருமதி தவராணி சொரூபலிங்கம் (கிளி), சாந்தகுமார் (சாந்தன் - லண்டன்), சிவனேஸ்வரவேல் (சிவா/குட்டி - சுவிஸ்), திருமதி செல்வராணி மோகானந்தம் (யமுனா - கொலண்ட்), செல்வக்குமார் (செல்வா/குட்டி - கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் (கலையகம் - ஆவரங்கால்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கருநடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலையகம்,
ஆவரங்கால். (13346)

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்பு :- 077 6505022, 077 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.